**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.21

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ஜெபக்குமார்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.06.2026**

A3 present. others absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 10 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி காமராஜர் சிலை அருகே உள்ள அருணாசலபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் சிசிடிவி கேமரா சர்வீஸ் செய்யும் வேலை செய்து வருகிறேன். 26.03.2022 அன்று காலை 10.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் ஒரு இடத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்வதற்காக அழைத்ததன்பேரில் நானும், சீனிவாசன் என்பவரும், பெருமாள்சாமி மகன் நடராஜன் என்பவரின் வீட்டிற்கு சென்றோம். சம்பவம் நடந்த இடத்திற்கும், நாங்கள் சென்ற நடராஜன் வீடும் 1 கி.மீ தொலைவிற்குள் இருக்கும். அங்கே இந்த வழக்கு சம்மந்தமான சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து அது சம்மந்தமான பதிவுகளை 2 பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுத்தேன். அதை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-28** ஆகும். அத்தாட்சியில் முதலாவதாக நானும், இரண்டாவதாக சீனிவாசனும் கையொப்பம் செய்து கொடுத்தோம்.

அதன்பிறகு மறுநாள் 27.03.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி அதே நடராஜன் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளை டிவிஆர் மூலம் ஹார்டு டிஸ்க்கில் பதிவு செய்யப்பட்டதை டிவிஆருடன் கைப்பற்றி பின்னர் வேறுஒரு டிவிஆர் பொருத்திக்கொடுக்குமாறு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், வீட்டின் உரிமையாளர் நடராஜன் ஆகியோர் முன்னிலையில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த டிவிஆரை கழற்றி எடுத்துவிட்டு பழைய டிவிஆரை பொருத்தி கொடுத்தேன். அது நடராஜன் வீட்டிலிருந்து கழற்றிய டிவிஆர் Hikviction மாடல் ஆகும். அதன் சீரியல் நம்பர் தற்போது ஞாபகமில்லை. அதை கைப்பற்றியதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-29** ஆகும். அத்தாட்சியில் முதலாவதாக நானும், இரண்டாவதாக சீனிவாசனும் கையொப்பம் செய்து கொடுத்தோம்.

அதன்பிறகு போலீசார் என் முன்னிலையில் வேறு ஏதாவது சான்றுபொருட்களை கைப்பற்றினார்களா என்றால் நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் 10.04.2022 தேதியிட்ட அத்தாட்சிகளில் காணப்படும் கையெழுத்து என்னுடையதுதான். அதை டிவிஆர் கைப்பற்றி கொடுத்தற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். அதில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் மட்டும் என்னுடையது அது **அ.சா.ஆ- 30 வரிசை (3 எண்ணம்)** ஆகும். அந்த பென்டிரைவர்கள், மற்றும் டிவிஆரை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

நான் எத்தனை வருடங்களாக சிசிடிவி தொழில் செய்து வருகிறேன் என்றால் 10 வருடமாக செய்து வருகிறேன். டிவிஆர், என்விஆர் ஆகிய 2 க்கும் இடையேயுள்ள வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். என்விஆர் என்பது Network Video Record என்றால் சரிதான். என்விஆர் என்பது நெட்வொர்க் சர்வேரோடு இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இயங்கும் என்றால் சரிதான். நான் போலீசார் முன்னிலையில் எடுத்துக்கொடுத்ததாக சொல்லக்கூடியது எல்லாம் டிவிஆர் என்றால் சரிதான். டிவிஆரில் பொதுவாக எத்தனை நாட்களுக்குள்ள பதிவுகள் இருக்கும் என்றால் 15 நாட்களிலிருந்து 30 நாட்கள் பதிவுகள் இருக்கும். நான் போலீசாருக்கு கைப்பற்றிய டிவிஆர் எத்தனை நாட்களுக்கு பதிவு செய்யக்கூடியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் முன்னிலையில் நான் வீடியோவை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் அது எத்தனை நாட்களுக்குள்ள பதிவுகள் இருந்தது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். வீடியோ பதிவுகள் முழுமையும் ஒருநாள் முழுமைக்கும் ஒரே பதிவாகத்தான் பதிவாகும் என்றால் சரிதான். போலீசாரிடம் நான் பதிவுகளை பதிவு செய்து கொடுத்தது ஒருநாள் முழுமைக்குமான பதிவுகள் என்றால் சரிதான். என் முன்னிலையில் அந்த பென்டிரைவோ, டிவிஆரோ சீல் வைத்து எடுத்து செல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த டிவிஆர் எத்தனை ஜிபி கெப்பாசிட்டி உள்ளது என்றோ, பென்டிரைவ் எத்தனை ஜிபி கெப்பாசிட்டி உள்ளது என்றோ தெரியாது என்றால் சரிதான். அந்த பென்டிரைவ் எந்த கம்பெனியை சார்ந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பதிவிறக்கம் செய்து கொடுத்ததாக சொல்லக்கூடிய வீடியோ பதிவுகளை கணினியில் தேர்ச்சி பெற்ற எவரும் எளிதாக எடிட் செய்துவிடலாம் என்றால் சரிதான்.

டிவிஆரிலிருந்து பென்டிரைவில் பதிவுகளை காப்பி செய்ய வேண்டுமென்றால் வயர் மாட்டி கணினிமூலமாகதான் பதிவுசெய்யவேண்டும் என்றால் சரிதான். டிவிஆர், என்விஆர் அதை HTMI கேபிள் மூலம் கணினியில் கனெக்ட் செய்து தேதிகளை மாற்றம் செய்ய இயலும் என்றால் சரியல்ல. என்விஆருக்கு நெட்வொர்க் கனெக்சன் இல்லை என்றால் அந்த நெட்வொர்க் கனெக்சனுக்கு ஏற்ப தேதிகள் மாறுபடும் என்றால் சரியல்ல. என்விஆரில் நெட்வொர்க் கனெக்சன் இருந்தால் மட்டுமே தேதிகளை பதிவு செய்ய இயலும் என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. Network Time Protocol என்ற மென்பொருள் மூலமாகத்தான் என்விஆரில் தேதிகளை பதிவு செய்ய இயலும் என்றால் சரிதான். Network Time Protocol என்ற மென்பொருளை uninstall செய்து மீண்டும் install செய்யும்போது தேவைகேற்ப தேதிகளை திருத்தி கொள்ளலாம் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் போலீசாருக்கு பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் முன்னிலையில் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் பார்வையிடவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பமிட்டுவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.22

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. கிருஷ்ணசாமி** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.06.2026**

A3 present. others absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:—**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல் தொலை தொடர்பு பிரிவில் காவல்துணை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் (தொழில்நுட்பம்)ஆக பணிபுரிந்து வந்தேன். 26.03.2022 ஆம் தேதி கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் மேற்படி காவல்நிலைய குற்ற எண். 211/2022 சட்டபிரிவு 302, 506(2) இதச வழக்கில் கோவில்பட்டி, கிருஷ்ணாநகர், ஹவுசிங்போர்டு கதவு எண். 5/619z3 என்ற முகவரியை சேர்ந்த பெருமாள்சாமி மகன் நடராஜன் என்பவரின் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள என்விஆரிலிருந்து உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை 25.03.2022 அன்று பிற்பகல் 3.23 மணி முதல் 3.58 மணிக்குள் சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்கள். அந்த கடிதம் நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–31** ஆகும். அதன்படி மேற்படி முகவரிக்கு 26.3.2022 அன்று காலை 10.00 மணிக்கு சென்று மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் மற்றும் அங்கிருந்த 2 சாட்சிகள் முன்பு மேற்படி வீட்டில் ரோட்டை கவர் செய்திருந்த கேமராவில் உள்ள பதிவுகளை பிற்பகல் 2.45 மணி முதல் 3.20 வரை பார்த்ததில் அதில் சம்பவ நேரத்திலிருந்து 38 நிமிடங்கள் தாமதமாக பதிவாகியிருந்த சிசிடிவி பதிவுகளை சன்டிஸ்க் 32 ஜிபி பென்டிரைவ் இரண்டில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். நான் பதிவு செய்த சன்டிஸ்க்கை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

பதிவிறக்கம் செய்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பென்டிரைவர்கள் என் முன்னிலையில் சீல் வைத்து உறையிடப்பட்டு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த பென்டிரைவர்களில் உள்ள பதிவுகளை யார் வேண்டுமானாலும் எடிட் செய்யலாம் என்றால் இயலாது. பென்டிரைவர்களில் பதிவு செய்யப்பட்டதற்கு நான் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொன்ன நாள், நேரத்தில் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் போலீசாருக்கு பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் முன்னிலையில் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் பார்வையிடவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பமிட்டுவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.23

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. திருநாவுக்கரசு** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.06.2026**

A3 present. others absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போதும் கடந்த 2017 முதல் 2022 ஆம் வருடம் வரையிலும் தூத்துக்குடி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தொழில்நுட்பபிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் மேற்படி காவல்நிலைய குற்ற எண். 211/2022 சட்டபிரிவு 302, 506(2) இதச வழக்கு சம்மந்தமாக கயத்தாறு பனிக்கர்குளம் விலக்கில் உள்ள சிசிடிவி பதிவுகளை சேகரித்து கொடுக்கவேண்டி ஆய்வாளர்கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று, 10.04.2022 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் அடையாளம் காட்டி கயத்தாறு பனிக்கர்குளம் விலக்கில் உள்ள சிசிடிவி கேமராவில் கேமரா எண்.1ல் 25.03.2022 ஆம் தேதி பதிவாகியுள்ள பதிவுகளை பார்வையிட்டேன். மேற்படி கேமரா பதிவில் 25.03.2022 ஆம் தேதி காலை 9.45.22 செகண்டிலிருந்து காலை 09.46.30 நொடி நேரம்

வரையிலான உள்ள வீடியோ பதிவுகளை பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்தேன். அதை ஆய்வாளர் சாட்சிகள் முன்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அதில் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ– 30 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இது சம்மந்தமாக 65 பி சாட்சிய சட்டப்படி சான்றுவழங்கினேன். அந்த சான்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 32** (எதிரிதரப்பு வழக்கறிஞர் பென்டிரைவ் நீதிமன்றத்தில் இல்லாத நிலையில் 65 பி சான்றிதழை குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபித்தார், பென்டிரைவ் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டு அது ஆய்விற்காக நீதிமன்றத்தின் மூலம் Forensic Department க்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் எதிரிதரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

அ.சா.ஆ–32 ஆவணத்தில் நான் வீடியோ பதிவை என்னவகையான பென்டிரைவில் காப்பி செய்து கொடுத்தேன் என்ற விவரங்களோ, அது எத்தனை ஜிபி உள்ளது என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். பதிவிறக்கம் செய்து கொடுத்தது டிவிஆரிலிருந்தா, அல்லது என்விஆரிலிருந்தா என்ற விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கணினியில் போட்டுப்பார்த்து பதிவிறக்கம் செய்யப்பட்டதா, அல்லது மடிக்கணினியில் போட்டுப்பார்த்து பதிவிறக்கம் செய்யப்பட்டதா என்று அதில் துலங்காது என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்கள் எதுவும் சொல்லப்படாததால் அ.சா.ஆ–32 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ஒரு பென்டிரைவில் காப்பி செய்து

கொடுத்ததாகத்தான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பென்டிரைவும் என்னவகையானது என்றும், எவ்வளவு கெப்பாசிட்டி உள்ளது என்றும் என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். அ.சா.ஆ–30 வரிசையில் பென்டிரைவ் இரண்டு எண்ணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ–30 வரிசையில் என்னுடைய கையொப்பம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் பதிவிறக்கம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் என்விஆரையும், பென்டிரைவையும் சீல் வைத்து உறையிடப்பட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் போலீசாருக்கு பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் முன்னிலையில் எந்த ஒரு வீடியோ பதிவுகளையும் பார்வையிடவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பமிட்டுவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.